# வாலாஜாபேட்டை நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2017–2018

## அமைப்பும் நிர்வாகமும்

### ஆட்சி எல்லை

வாலாஜாபேட்டை நகராட்சி முதன் முதலாக 02.11.1866 ல் மூன்றாம் நிலை நகராட்சியாக துவக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.நி.5) துறை நாள் 22.05.1998 அன்று, இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியின் பரப்பளவு 2.64 ச.கி.மீ. ஆகும்.

1991 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் (திருத்தம்) 1996 ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 08.06.1996 தேதிய செயல்முறைகள் ந.க.எண்.83642/96/எம்.ஐ./தேர்தல்–3 ன் படியும் வாலாஜாபேட்டை நகராட்சியின் 20 எண்ணிக்கை வார்டுகளை 24 வார்டுகளாக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

### மக்கள் தொகை

இந்நகராட்சி மக்கள் தொகை 1971 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 13,179 ஆகும். 1981 ம் ஆண்டில் 19563 ஆக கணக்கெடுப்பு செய்யப்பட்டு 1991 ம் ஆண்டின் மக்கள் தொகை கணகெடுப்பின்படி 26,972 ஆக உயர்ந்தது. 2001 ம் ஆண்டில் 29,475 ஆக கணக்கெடுப்பு செய்யப்பட்டு தற்பாது 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 32001 ஆக உள்ளது. இதில் ஆண்கள் 15874 ம் பெண்கள் 16127 ம் ஆகும்.

**<u>நகராட்சி அலுவலர்கள்</u>**

**<u>ஆணையர்</u>**

அறிக்கையாண்டில் **01.04.2017** முதல் **31.03.2018** வரை திரு.கு.அசோக்குமார் ஆணையராக பணிபுரிந்து வருகிறார்.

**<u>மேலாளர்</u>**

**01.04.2017** முதல் **31.03.2018** வரை திருமதி.பா.தனலட்சுமி, மேலாளராகவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>கணக்கர்</u>**

செல்வி.வனஜா, கணக்கராக **01.04.2017** முதல் **31.06.2017** வரை பணியாற்றினர், **01.07.2017** முதல் **30.11.2017** வரை திரு.கே.நாகரத்தினம், உதவியாளர் கூடுதல் பொறுப்பாக கணக்கராக பணியாற்றினர். **01.12.2017** முதல் **31.03.2018** வரை கணக்கராக திரு.எம்.நாகராஜ், கணக்கராக பணியாற்றினார்.

**<u>பொறியாளர்</u>**

அறிக்கையாண்டில் திரு.வி.கார்த்திகேயன் நகராட்சி பொறியாளராக **01.04.2017** முதல் **07.11.2017** வரை பணியாற்றினார். **08.11.2017** முதல் திரு.எம்.கமலகண்ணன், பணிமேற்பார்வையாளர் கூடுதல் பொறுப்பாக நகராட்சி பொறியாளராக பணியாற்றினார். திரு.

**<u>நகரமைப்பு ஆய்வர்</u>**

**01.04.2017** முதல் **31.03.2018** வரையிலும், திரு.கே.சுரேஸ் நகரமைப்பு ஆய்வராக கூடுதல பொறுப்பாக பணியாற்றினர்.

**<u>துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர்</u>**

அறிக்கையாண்டில் திரு.ந.ஆறுமுகம், துப்புரவு பணிமேற்பார்வையாளர் என்பவர் **01.04.2017** முதல் **07.08.2017** வரை (கூடுதல் பொறுப்பு) பணியாற்றினர். **08.08.2017** முதல் **31.03.2018** வரை திரு. எம்.சாம்கலோனல், துப்புரவு ஆய்வராக பணியாற்றினார் மற்றும் 04.10.2017 முதல் 31.03.2018 வரை திரு.எம்.பழனிசாமி, துப்புரவு அலுவலராக பணியாற்றினார்.

.

<u>நிர்வாகம்</u>

அறிக்கையாண்டில் புதிய பணியிடம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. நகராட்சியில் உள்ள பணியிடங்களின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் | வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆணையர் | 1 | 15 | மின் கம்பி உதவியாளர் | 1 |
| 2 | மேலாளர் | 1 | 16 | பொறியியல் பிரிவு ஓட்டுநர் | 2 |
| 3 | உதவியாளர்கள் | 2 | 17 | நீர்தேக்கத் தொட்டி காவலர் | 2 |
| 4 | இளநிலை உதவியாளர்கள் | 5 | 18 | குழாய் சுத்திகரிப்பாளர் | 2 |
| 5 | தட்டச்சர் | 1 | 19 | நகரமைப்பு ஆய்வர் | 1 |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 | 20 | சங்கிலியாளர் | 1 |
| 7 | அலுவலக உதவியாளர்கள் | 3 | 21 | துப்புரவு ஆய்வர் | 1 |
| 8 | இரவுக் காவலர் | 1 | 22 | துப்புரவு மேற்பார்வையாளர் | 3 |
| 9 | உதவி திட்ட அமைப்பாளர் | 1 | 23 | மகப்பேறு உதவியாளர் | 1 |
| 10 | வருவாய் உதவியாளர்கள் | 3 | 24 | மகப்பேறு ஆயா | 1 |
| 11 | நகராட்சி பொறியாளர் | 1 | 25 | களப்பணியாளர் | 1 |
| 12 | பணி மேற்பார்வையாளர் | 1 | 26 | பொது சுகாதார ஓட்டுநர் | 3 |
| 13 | மின்பணியாளர்கள்(நிலை–2) | 2 | 27 | துப்புரவு பணியாளர்கள் | 64 |
| 14 | மின்கம்பியாளர் | 1 | 28 | சமுதாய அமைப்பாளர் | 1 |
| | | 25 | | | 83 |

மேற்படி பணியிடங்களில் அறிக்கையாண்டில் காலியாக இருந்த பணியிடங்களின் விவரம்

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் | வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 0 | | | |
| 2 | களப்பணியாளர் | 1 | | | |
| 3 | மகப்பேறு உதவியாளர் | 1 | | | |
| 4 | துப்புரவு பணியாளர் | 25 | | | |

## கல்வி

அறிக்கையாண்டில் இந்நகராட்சிப் பகுதியில் 5 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு வந்தன. புதியதாக ஒரு பள்ளி பல்லிவெங்கடாசலபதி தெருவில் துவங்கப்பட்டது 31.03.2018 முடிய நகராட்சி கல்விக் கூடஙகளில் வருகை தந்த மாணவ மாணவிகளின் எண்ணிக்கை மற்றும் அறிக்கையாயண்டின் முந்தைய ஆண்டுக்குரிய மாணவ மாணவிகளின் எண்ணிக்கை விவரம்.

| பள்ளியின் பெயர் | 2017–2018 ம் ஆண்டில் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| நகராட்சி மார்கெட் நடுநிலைப் பள்ளி | 329 |
| நகராட்சி மத்திய துவக்கப் பள்ளி | 92 |
| நகராட்சி இருபாலர் நடுநிலை பள்ளி | 244 |
| நகராட்சி துவக்க சௌராஷ்டிரா பள்ளி | 127 |
| நகராட்சி துவக்க முஸ்லிம் பள்ளி | 17 |
| நகராட்சி வடக்கு துவக்கப்பள்ளி | 36 |
| மொத்தம் | 845 |

நகராட்சிப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழஙகுடி வகுப்பினருக்காக தனியாக பள்ளிகள் ஏதும் இல்லை. மேற்படி குழந்தைகள் எல்லா பள்ளிகளிலும் சேர்ந்து பயில அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி பள்ளிகளில், மூஸ்லீம் தொடக்கப் பள்ளி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் உருது மொழி பாடஙகள் போதிக்கப்பட்டு வருகின்றன.

நகராட்சி பள்ளிகள் அனைத்தும் சொந்த கட்டிடத்தில் இயஙகி வருகின்றன. எந்தப் பள்ளிகளிலும் விளையாட்டு திடல் ஏதும் இல்லாத நிலையில் பள்ளி வளாகத்தில் உள்ள காலியிடம் விளையாட்டுத் திடலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஆரம்பக் கல்வி நிதி

நகராட்சியால் வசூலிக்கப்படும் சொத்துவரியில் கல்வி வரியாக 2.5 சதவிகிதம் விதிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் கல்வி வரியாக ரூ.14,48,521/– வசூல் செய்யப்பட்டுள்ளது. கல்வி நிதியிலிருந்து அறிக்கையாண்டில் மற்றும் பராமரிப்புக்காக ரூ.36.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்

அரசாணை எண்.227 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 10.07.1997 ல் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட இயகுநரின் கட்டுப்பாட்டின் கீழ் அமல்படுத்தப்பட்டு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறைக்கு 01.01.1997 ல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆணையின்படி நடப்பு ஆண்டில் கீழ்கண்ட நகராட்சி பள்ளிகளில் சத்துணவு மையங்கள் இயஙகி வருகின்றன.

1. மார்க்கெட் பள்ளி 2. மத்தியப் பள்ளி 3. மிக்சட் பள்ளி 4.சௌராஷ்டிரா பள்ளி 5. முஸ்லீம் பள்ளி, 6) நகராட்சி துவக்கப்பள்ளி(வடக்கு) மேற்கண்ட அரசு மற்றும் அரசு நிதி உதவி பள்ளிகளில் சத்துணவு மையஙகள் இயஙகி வருகிறது.

2017–2018–ம் ஆண்டில் பள்ளி சத்துணவு மையஙகளில் வேலை நாட்களில் நாள்தோறும் 682 மாணவர்களுக்கு சத்துணவு வழஙகப்பட்டது. இத்திட்டத்திற்கான உணவுப் பொருட்கள் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. சத்துணவு திட்டத்தில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ.எண். | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உதவியாளர் மற்றும் கணக்கர் | 1 |
| 2 | சத்துணவு அமைப்பாளர்கள் | 4 |
| 3 | சமையலர்கள் | 5 |
| 4 | சமையல் உதவியாளர்கள் | 4 |

## பொது வாசக சாலைகள்

இந்நகராட்சியால் நூலகம் ஏதும் நிர்வகிக்கப்பட வில்லை. அரசு மாவட்ட கிளை நூலகம் ஒன்று இந்நகராட்சிப் பகுதியில் அமையப் பெற்று இயஙகி வருகிறது. சொத்துவரி வசூல் செய்யப்படும் தொகையில் நூலக வரியாக தொகை ரூ.265815– வசூல் செய்யப்பட்டு அறிக்கையாண்டில் மாவட்ட நூலக அலுவலகத்திற்கு முழுவதும் செலுத்தப்பட்டது.

**<u>கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்</u>**

இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியிலா இனஙகள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் வழஙகப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கணினி வரிவசூல் சேவை மையத்தில் பொதுமக்களால் வரிவிதிப்புகளுக்கான தொகை செலுத்தப்பட்டு வருகிறது.

**<u>பொது சுகாதாரம்</u>**

இந்நகராட்சியில் நல அலுவலர் பணியிடம் ஏதும் இல்லை. ஆணையரே நல அலுவலராக செயல்பட்டு வருகிறார். ஒரு துப்புரவு அலுவலர், ஒரு துப்புரவு ஆய்வர், மூன்று துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 39 துப்புரவு பணியாளர்களுடன் சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்கள் மத்தியில் சுகாதாரம் சம்மந்தமான விளம்பரஙகளும், பிராசாரஙகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம், தேசிய யானைக்கால் நோய் தடுப்பு முகாம் சம்மந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மருத்துவ சேவைகள் செய்யப்பட்டன.

**<u>பிறப்பு இறப்பு விகிதம் மற்றும் தாய் சேய் நல வசதி</u>**

அறிக்கையாண்டில் 1301 பிறப்புகளும், 391 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமான நகர் நல மையம் ஒன்று லாலாபட்டை தெத்து தெருவில் இயஙகி வருகிறது. மேற்படி மையத்தில் மகப்பேறு உதவியாளர் பணியிடம் காலியாக இருந்ததால் அறிக்கையாண்டில் கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவம் ஏதும் பார்க்கப்படவில்லை. அரசுபொது மருத்துவமனை மூலம் கீழ்கண்டவாறு தாய் மற்றும் சேய்களுக்கு மருந்து மற்றும் தடுப்பூசிகள் மூலம் நலன் காக்கப்பட்டது.

| வ.எண். | மருந்து / தடுப்பூசி | பயணாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பி.சி.ஜி. | 1112 |
| 2 | டிபிடி | 1324 |
| 3 | தட்டம்மை ஊசி | 424 |
| 4 | ஜன்னி ஊசி | 447 |

'வைட்டமின் ஏ' முகாம் செப்டம்பர் 2015 மாதஙகளில் இந்நகராட்சிப் பகுதியில் நடத்தப்பட்டன.

**கொள்ளை நோய் விவரஙகள்**

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர் விவரம்

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | –– |
| 2 | அம்மை | 5 |
| 3 | பிளேக் | –– |
| 4 | சீதபேதி | –– |
| 5 | வயிற்றுக் கடுப்பு | –– |
| 6 | காய்ச்சல் | 510 |
| 7 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | –– |
| 8 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | 90 |

அறிக்கையாண்டில் இந்நகரில் அம்மை, பிளேக் போன்ற தொற்று நோய்கள்

ஏதுமில்லை. மலேரியா நோய் அரசு மருத்துவமனையால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவம் பார்க்கப்பட்டது.

**யானைக்கால் நோய் தடுப்பு திட்டம்**

இவ்வாண்டில் இந்த நோயால் இறந்தவர்கள் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பிரிவு மூலம் நகரமெஙகம் பேடெக்ஸ் மருந்து கொசு மருந்து தெளிக்கப்பட்டு நோய் பரவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**துப்புரவு பணிகள்**

பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டது. இந்கராட்சிப் பகுதியில் 10 எண்ணிக்கை நவீன கழிப்பறை பராமரிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் ஒரு டிப்பர், இரண்டு டம்பர் பிளேசர், ஒரு மினி லாரி, மற்றும் 15 மூன்று சக்கர மிதிவண்டி ஆகியவை துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டது. வார்டு எண்.2, 3, 4, 5, 9, 10, 13, 14, மற்றும் 19 ஆகிய 9

வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. பாதாள சாக்கடை திட்டம் இந்நகராட்சியில் இல்லை. திறந்தவெளி கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை**

2017–2018 ம் ஆண்டில் உர உற்பத்தி மற்றும் விற்பனை ஏதும் இல்லை. வாலாஜா துணைப் பதிவைச் சேர்ந்த வன்னிவேடு கிராமத்தில் சர்வே எண்.360/4, 362/1, 2, 363, 364/4, மற்றும் 365 ல் அமைந்துள்ள 3.70 1/2 செண்ட் இடத்தில் உரக்கிடஙகிற்காக நிலம் வாஙகப்பட்டு நகராட்சி பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

**வருவாயினம்**

அறிக்கையாண்டில் சொத்துவரியாக தொகை ரூ.5125628/– மற்றும் தொழில்வரியாக ரூ.1670937/– வசூல் செய்யப்பட்டுள்ளது. நூலகவ வரியாக சொத்துவரி பொது காரியத்திற்காக பிரிக்கப்படும் தொகையில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் மாவட்ட நூலக அலுவலகத்திற்கு செலுத்தப்படுகிறது.

அறிக்கையாண்டில் 99 கடைகள் கொண்ட வார சாந்தை மற்றும் கடைகள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டது.

குத்தகை இனத்தலைப்பில் கீழ்வருமாறு 2017–18–ம் ஆண்டில் வருமான வரப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி கடைகள் | ரூ.1579304/– |
| 2 | தற்காலிக கடைகள் | ரூ.442100/– |
| 3 | பேரூநது நிலைய கட்டண கழிப்பிடம் | ரூ.177643/– |
| 4 | திருமண மண்டபம் | ரூ.458646/– |
| 5 | 99 கடைகள் | ரூ.4,55,421/– |
| 6 | பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம் | ரூ.463052/– |
| 7 | ஆடு அறுக்கும் தொட்டி | ரூ.212180/– |
| | மொத்தம் | ரூ.4236958/– |

## நகரமைப்பு

இந்நகராட்சி நகரமைப்பு பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வரும் ஒரு சங்கிலியாளரும் பணிபுரிகின்றனர். 1971 ம் ஆண்டு நகர் ஊரமைப்பு சட்டத்தின்கீழ் வாலாஜா உள்ளூர் திட்க் குழுமம் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசாணை எண்.195 நாள் 14.02.91 ன் படி அங்கீகரிக்கப்பட்டு அதன்படி நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. 01.04.2004 முதல் உரிமையாணை கட்டணம் நகர்மன்ற தீர்மானம் எண்.343 நாள் 28.05.2004 ன் படி கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானஙகள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானஙகள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டத்தின்கீழ் அறிவிப்பு வழஙகப்பட்டு அஙகீகாரம் பெற ஆவண செய்யப்படுகிறது. அஙகீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நீதிமன்ற வழக்கு தொடுக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் 79 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பஙகள் வரப்பெற்று 74 விண்ணப்பஙகளுக்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது. 5 எண்ணிக்கையில் அனுமதி மறுக்கப்பட்டது.

## பொறியியல் பணிகள்

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டும் மற்றும் நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | எடுக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|
| 1 | வறட்சி நிவாரண பணி 2017-18 | 1 | 6.00 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 | 2 | 14.50 |
| 3 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 | 2 | 14.00 |
| 4 | SBM-2016-17 | 5 | 114.00 |
| 5 | TURIF – 2017-18 | 1 | 50.00 |
| 7 | பொதுநிதி பணிகள் | 22 | 51.00 |
| 8 | குடிநீர் பணிகள் lanning | 9 | 26.00 |
| | | | 655655655655 |

**சுவர்ண ஜெயந்தி திட்டம் – 2017–2018**

**சுய வேலைவாய்ப்பு திட்டம் ( USEP)**

சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் மான்யத் தொகை ஏதும் பெறப்படவில்லை.

**நகர்புற கூலி வேலைவாய்ப்பு திட்டம் ( UWEP)**

**நகர்புற பெண்கள் சுய உதவி திட்டம் ( UWSP)**

நகர்புற பெண்கள் சுய உதவி திட்டத்தின்கீழ் மான்யத் தொகை பெறப்படவில்லை.

**திறன் வளர்ப்பு பயிற்சி திட்டம் ( STEP UP)**

திறன் வளர்ப்பு பயிற்சி திட்டத்தின்கீழ் மான்யத் தொகை பெறப்படவில்லை.

**சிக்கன நாணய கடன் சங்கம் ( TCS)**

**மான்யம்**

| வ.எண். | விவரம் | தொகை(இலட்சத்தில்) ரூ. |
|---|---|---|
| 1 | முத்திரை தாள் | 17.29 |
| 2 | மாநில நிதிக்குழு | 268.64 |
| 3 | ஈமச்சடங்கு | 0.25 |
| 4 | சுவர்ண ஜெயந்தி திட்டம் | 0.00 |
| 5 | சத்துணவு திட்டம் | 0.00 |
| 6 | உள்ளாட்சி தேர்தல் | – |

**வரவு மற்றும் செலவினங்கள்**

| நிதி | வரவு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|
| பொது நிதி | 9423766 | 41872344 |
| குடிநீர் நிதி | 3625085 | 9238359 |
| கல்வி நிதி | 828263 | 1283076 |

**தணிக்கை**

2017–2018– ம் ஆண்டு வரை தணிக்கை கணக்குகள் 11.06.2016–ல் அனுப்பப்பட்டு உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை வேலூார் அவர்கள் மூலம் தணிக்கை செய்ய தயார் நிலையில் உள்ளது. 2016–17–ம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டது.

**பொது குறிப்பு**

தமிழ்நாட்டில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நகராட்சியான வாலாஜாபேட்டை நகராட்சியின் நல்லதொரு நிர்வாகத்திற்கு ஆணையருடன் ஒருங்கிணைந்து, மிகுந்த ஒத்துழைப்பு தந்த நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற தணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர வாழ் பொது மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியினை இத்தருனத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்
வாலாஜாபேட்டை நகராட்சி